# COMBINED TECHNICAL SERVICES EXAMINATION
## (INTERVIEW POSTS)
## COMPUTER BASED TEST
## PAPER – II – LAW (DEGREE STANDARD)

1. The Election Commission exercises these function as called as miscellany functions
தேர்தல் ஆணையம் இவ்வகை அதிகாரங்களை பயன்படுத்தலால் அவைகள் இதர நிர்வாக செயல்பாடுகளாக கருதப்படுகிறது

   (A) Legislative
   சட்டமியற்றல்

   (B) Administrative
   நிர்வாக செயல்பாடு

   (C) Adjudicatory
   நீதிதுறை செயல்பாடு

   (D) Legislative, administrative as well as adjudicatory
   சட்டமியற்றல், நிர்வாக செயல்பாடு மற்றும் நீதிதுறை நடவடிக்கை

   (E) Answer not known
   விடை தெரியவில்லை

2. "Rule of law is the anti thesis of arbitrariness" – Justice Khanna has stated in
நீதியரசர் – கண்ணா, பின்வரும் எந்த வழக்கில் சட்டத்தின் ஆட்சி என்பது தன்னிச்சையான அதிகாரத்திற்கு எதிரானது எனக் கூறியுள்ளார்?

   (A) Bachan Singh V. State of Punjab
   பச்சன் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம்

   (B) A.D.M. Jabalpur V. S. Shukla
   ஏ.டி.எம். ஜெபல்பூர் எதிர் S. சுக்லா

   (C) Golak Nath Vs. State of Punjab
   கோலக் நாத் எதிர் பஞ்சாப் மாநிலம்

   (D) E.P. Royappa V. State of Tamil Nadu
   E.P. ராயப்பா எதிர் தமிழ்நாடு அரசு

   (E) Answer not known
   விடை தெரியவில்லை

3. Assertion [A] : Before 1947, India was a police state.

கூற்று [A] : 1947 க்கு முன், இந்தியா ஒரு போலீஸ் அரசாக இருந்தது.

Reason [R] : The laissez faire doctrine remitted in human misery.

காரணம் [R] : தனிமனிதத்துவம் கோட்பாடு மனிதத் துயரத்திலிருந்து விளைந்தது.

(A) [A] is true; [R] is false
[A] என்பது சரி [R] என்பது தவறு

(B) [A] is false; [R] is true
[A] என்பது தவறு [R] என்பது சரி

(C) Both [A] and [R] is true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி மேலும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் ஆகும்

(D) Both [A] and [R] is true but [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

4. "Rule of law requires that any abuse of power by public officer should be subject to control of courts" held in the case
"சட்டத்தின் ஆட்சியில் எந்த ஒரு அரசு அதிகாரியின் அதிகார மீறிய செயல் நீதிமன்ற கட்டுபாட்டிற்கு உள்ளடங்கியது". இந்த கருத்து நீதிமன்றத்தால் வழக்கில் கொள்ளப்பட்டது

(A) A.D.M. Jabalpur V. Shivkant Shukla
ஏ.டி.எம். ஜபல்பூர் எதிர் சிவகாந்த் சுக்லா

(B) State of Punjab V. Khanchand
பஞ்சாப் அரசு எதிர் கன்சந்த்

(C) A.K. Kraipak V. Union of India
ஏ.கே. க்ரைபாக் எதிர் ஒன்றிய அரசு

(D) Indira Sawshney II V. Union of India
இந்திரா சஹானி II எதிர் ஒன்றிய அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

5. Assertion [A] : The greater, the power given to the executive, the greater the need to safeguard the citizen against its arbitrary or unfair exercise.

கூற்று [A] : நிறைவேற்று அதிகாரிக்கு எவ்வளவு அதிக அதிகாரம் வழங்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு குடிமகனின் தன்னிச்சையான அல்லது நியாயமற்ற நடவடிக்கைக்கு எதிராகப் பாதுகாப்பும் அதிக தேவையாக இருக்கிறது.

Reason [R] : To evolve an adequate and effective mechanism to contain these dangers only controlling the administration in exercising is power, safeguarding individual rights are necessary.

காரணம் [R] : தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவன் மூலம் இந்த ஆபத்துகளைக் கட்டுப்படுத்த போதுமான மற்றும் பயனுள்ள பொறிமுறையை உருவாக்குவதும் மிக அவசியமாக கருதப்படுகிறது.

(A) [A] and [R] are true
[A] மற்றும் [R] சரி

(B) [A] true [R] false
[A] சரி [R] தவறு

(C) [A] false [R] true
[A] தவறு [R] சரி

(D) [A] and [R] are true [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி [R] ஆனது [A] ன் சரியான விளக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

6. Assertion [A] : Close supervision over the administration and a mechanism for redressal of grievances become essential.

கூற்று [A] : நிர்வாகத்தின் மீது நெருக்கமான கண்காணிப்பு மற்றும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறை கட்டாயம் தேவைப்படுகிறது.

Reason [R] : The administration in India has been acquiring vast powers, and thus lead to abuse of powers.

காரணம் [R] : இந்தியாவில் நிர்வாகம் பரந்த அதிகாரங்களைப் பெற்றதால், அதிகார துஷ்பிரயோகத்திற்கு வழி வகுக்கிறது.

(A) [A] and [R] are true. But [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி. [R] ஆனது [A] ன் சரியான விளக்கம் அல்ல

(B) [A] and [R] are true. [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி. ஆனால் [R], [A] ன் சரியான விளக்கம்

(C) [A] is wrong [R] true
[A] தவறு [R] சரி

(D) [A] true [R] wrong
[A] சரி [R] தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

7. Where the All India Conference of Lokayuktas and Uplokayuktas was held in 1986?
லோக் ஆயுக்தா மற்றும் அப்லோக் ஆயுத்தா தொடர்பான அகில இந்திய மாநாடு 1986-ல் எங்கு நடை பெற்றது?

(A) New Delhi
புது டில்லி

(B) Chennai
சென்னை

(C) Mumbai
மும்பை

(D) Simla
சிம்லா

(E) Answer not known
விடை தெரியவில்லை

8. Choose the correct answer from the following relating to concept of ultravires?
அல்ட்ரா வைரஸ் கோட்பாட்டை பொருத்தவரை பின்வருவனவற்றுள் எவை சரி?

(A) If the delegated legislation is not arbitrary
ஒப்படைக்கப்பட்ட விதியானது தன்னின்சையாக இல்லாமல், இருக்கும் பொழுது

(B) Where delegated legislation is fair and reasonable
ஒப்படைக்கப்பட்ட விதியானது நேரிய முறையிலும் நியாயமாக இருக்கும் பொழுதும்

(C) If the delegated legislation is not malafide
ஒப்படைக்கப்பட்ட விதியானது தீய எண்ணத்தில் இல்லாமல் இருக்கும் பொழுது

(D) When delegated legislation is arbitrary, unreasonable and malafide
ஒப்படைக்கப்பட்ட விதியானது தன்னிச்சையாகவும், நேரிய முறையில் இல்லாமலும், தீய எண்ணத்துடன் இருக்கும் பொழுது

(E) Answer not known
விடை தெரியவில்லை

9. Assertion [A] : Delegated legislation is necessary evil in modern democratic states.

கூற்று [A] : சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு நவீன ஜனநாயக நாடுகளில் அவசியமான தீமையாக கருதப்படுகிறது.

Reason [R] : The concept of state has been changed from police state to welfare state.

காரணம் [R] : அரசு என்ற கருத்து காவலர் அரசில் இருந்து நலன்புரி அரசாக மாற்றப்பட்டுள்ளது.

(A) [A] is true; [R] is false
[A] சரி ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] is true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி [R] ஆனது [A] ன் சரியான விளக்கம்

(C) [A] is false and [R] is true
[A] தவறு மற்றும் [R] சரி

(D) Both [A] and [R] are true, But [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி ஆனால் [R] ஆனது [A] ன் சரியான விளக்கம் இல்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

10. A public corporation is formed by a special act by legislature.
சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சிறப்புச் சட்டத்தின் மூலம் பொதுக் கழகம் உருவாக்கப்படுகிறது.

Reason :

காரணம் :

(1) It may owned only by state and not by central
இது மாநிலத்திற்கு மட்டுமே சொந்தமாக இருக்கலாம் ஆனால் மத்திய அரசுக்கு அல்ல

(2) It is a separate legal entity
இது ஒரு தனி சட்ட நிறுவனம்

(A) Both statement are not proper reason
இரண்டு அறிக்கைகளும் சரியான கூற்று அல்ல

(B) Only (1) is proper reason
(1) மட்டுமே சரியான கூற்று

(C) Only (2) is proper reason
(2) மட்டுமே சரியான கூற்று

(D) Both statements are correct assertion
இரண்டு அறிக்கைகளும் சரியான கூற்று

(E) Answer not known
விடை தெரியவில்லை

11. In which one of the following case, the Supreme Court held that "the expression tribunal as used in Article 136 does not mean the same things as 'court' but include, within its ambit, all adjudicating bodies"?
பின்வரும் எந்த வழக்கில் உச்ச நீதிமன்றம், "தீர்ப்பாயம் என்ற சொல், ஷரத்து 136-ல் உள்ளவாறு நீதிமன்றத்தை குறிப்பதல்ல, மாறாக தீர்ப்பளிக்கப்படும் அனைத்து அமைப்புகளையும் உள்ளடக்கும்" என கூறியது

(A) Durga Shankar Mehta Vs. Raghuraj Singh
துர்கா சங்கர் மேத்தா – எதிர் – ரகுராஜ் சிங்

(B) Bar Council of India Vs. High court of Kerala
இந்திய வழக்கறிஞர் மன்றம் – எதிர் – கேரளா உயர் நீதிமன்றம்

(C) Union of India Vs. J.N. Sinha
இந்திய ஒன்றியம் – எதிர் – ஜெ.என். சிங்ஹா

(D) Umrao Singh Vs. State of Madhya Pradesh
உம்ராவ் சிங் – எதிர் – மத்திய பிரதேச அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

12. Arrange the following cases in chronological order :
பின்வரும் வழக்குகளை கால முறைப்படி வரிசைப்படுத்துக :

(1) R.K. Jain Vs. Union of India
ஆர்.கே. ஜெயின் – எதிர் – இந்திய ஒன்றியம்

(2) Sampath Kumar Vs. Union of India
சம்பத் குமார் – எதிர் – இந்திய ஒன்றியம்

(3) L. Chandra Kumar Vs. Union of India
எல். சந்திர குமார் – எதிர் – இந்திய ஒன்றியம்

(4) M.B. Majumdar Vs. Union of India
எம்.பி. மஜூம்தார் – எதிர் – இந்திய ஒன்றியம்

(A) (1), (2), (3), (4)
(B) (4), (2), (1), (3)
(C) (2), (3), (1), (4)
(D) (2), (4), (1), (3)
(E) Answer not known
விடை தெரியவில்லை

13. Audi alteram partem has the three basic essentials. Which one is not correct among the following?
இருத்தரப்பினரையும் கேட்டல் என்பது மூன்று முக்கியமான மூலக்கூறு. கீழ்க்கண்டவற்றில் எவை அதைப் பற்றிய தவறான ஒன்று?

(A) Person affected by a decision, must be granted an opportunity of being heard
தீர்ப்பால் பாதிக்கப்படும் நபருக்கு, முழுவதுமான அவர் தரப்பு வாதத்தினை கேட்பதற்கான வாய்ப்பு வழங்க வேண்டும்

(B) Should provide fair and transparent procedure
நியாயமான, வெளிப்படையான முறைகளை வழங்க வேண்டும்

(C) Speaking order
காரண விவரங்கள் கூடிய ஆணைகள்

(D) Should be condemned un heard
வாதத்தினை கேட்காமல் தண்டனை வழங்கலாம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

14. The principle of legitimate expectation is in the constitutional principle of
சட்ட எதிர்பார்ப்பு என்ற கோட்பாடு இந்திய அரசியலமைப்பில் எதில் உள்ளது

(A) Fundamental rights
அடிப்படை உரிமைகளில்

(B) Preamble
முகப்புரையில்

(C) Separation of powers
அதிகார பகிர்வு கொள்கையில்

(D) Rule of law
சட்டத்தின் ஆட்சியில்

(E) Answer not known
விடை தெரியவில்லை

15. The administrative authorities keeps constant watch on exercising power of the executive is called
நிர்வாக அதிகாரிகள் நிர்வாகத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதை தொடர்ந்து கண்காணித்து வருவதை இவ்வாறு அழைப்பர்

(A) Legislative control
சட்டமன்றக் கட்டுப்பாடு

(B) Judicial control
நீதித்துறை கட்டுப்பாடு

(C) Procedural control
நடைமுறை கட்டுப்பாடு

(D) Authoritative control
அதிகாரபூர்வமான கட்டுப்பாடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

16. The question of interpretation of Section 123 of the Indian Evidence Act came to be examined in depth by the Supreme Court in
பின்வருவனவற்றுள் எந்த வழக்கில் உச்ச நீதிமன்றமானது இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 123 பற்றி மிக ஆழமான விளக்கங்களை ஆய்வு செய்துள்ளது?

(A) State of Punjab V. Sodhi Sukhdev Singh
பஞ்சாப் மாநிலம் எதிர் சோதி சுக்தேவ் சிங்

(B) State of Rajasthan V. Union of India
இராஜஸ்தான் மாநிலம் எதிர் மத்திய அரசு

(C) State of Tamil Nadu V. Ramalinga Samigal Madam
தமிழ்நாடு மாநிலம் எதிர் இராமலிங்க சுவாமிகள் மடம்

(D) State of Punjab V. Gurdial
பஞ்சாப் மாநிலம் எதிர் குர்தயாள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

17. Choose the correct statement about judicial review from the following :
நீதிமுறை மேலாய்வு குறித்த கீழ்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியான கூற்றாகும் :

(i) It is considered to be the basic feature of the constitution.
இது அரசமைப்பின் அடிப்படை தன்மையாக கருதப்படுகிறது.

(ii) It is a highly complex and developing subject.
இது மிகவும் சிக்கலான மற்றும் வளர்ந்து வரக்கூடிய ஒரு விசயமாகும்.

(iii) The court in exercise of its power to protect authorities and agencies of government.
நீதிமன்றம் அதன் அதிகாரத்தை அரசின் அங்கம் மற்றும் அமைப்புகளை பாதுகாக்க செயல்படுத்துகின்றது.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

18. Match the following public undertaking with its categorical classification :
பின்வரும் பொதுத்துறை நிறுவங்களை அவற்றின் வகைப்பாட்டு தன்மையோடு பொருந்தும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | Unit Trust of India<br>இந்திய பொறுப்புரிமை அலகு | 1. | Promotional and Developmental undertaking<br>வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் |
| (b) | National Small Industries Corporation Ltd.<br>தேசிய சிறுதொழில் கழகம் | 2. | Commercial and Industrial undertaking<br>வணிக மற்றும் தொழில் நிறுவனம் |
| (c) | Hindustan Machine Tools Ltd.<br>இந்துஸ்தான் இயந்திர கருவி நிறுவனம் | 3. | Public utilities<br>பொது பயன்பாடு நிறுவனம் |
| (d) | Electricity Board<br>மின்சார வாரியம் | 4. | Financial Institution<br>நிதி நிறுவனம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known

19. The Parliamentary Committee on public undertaking was established in the year
பொதுத்துறை நிறுவனங்களை பாராளுமன்ற குழு எந்த வருடம் ஏற்படுத்தப்பட்டது?

(A) 1962
(B) 1964
(C) 1970
(D) 1975
(E) Answer not known
விடை தெரியவில்லை

20. The Supreme Court declared ——— Act as void in R.C. Cooper V Union of India.

பின்வருவனவற்றில் எந்த சட்டம் செல்லாது என உச்ச நீதிமன்றத்தால் R.C. கூப்பர் எதிர் மத்திய அரசு வழக்கில் அறிவிக்கப்பட்டது?

(A) Banking Companies (Acquisition and Transfer of the undertakings) Act, 1969
வங்கி நிறுவனங்கள் (நிறுவனங்களை கையகப்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) சட்டம், 1969

(B) General Insurance (Emergency Provision) Act, 1971
பொது காப்பீடு (அவசர கால விதிகள்) சட்டம் 1971

(C) General Insurance Business (Nationalisation) Act, 1972
பொது காப்பீட்டு வணிக (தேசிய மயமாக்கல்) சட்டம் 1972

(D) The Sick undertakings (Nationalisation) Act, 1974
நலிவுற்ற ஜவுளி நிறுவனங்கள் (தேசிய மயமாக்கல்) சட்டம் 1974

(E) Answer not known
விடை தெரியவில்லை

21. Find out the correct order of the facts :
பொருண்மைகளை சரியான வரிசையில் பொருத்தவும் :

(i) Execution of death sentence passed by High Court
மரண தண்டனையை நிறைவேற்ற உயர்நீதிமன்றம் உத்தரவு

(ii) High court confirm the Death sentence
உயர்நீதிமன்றம் மரண தண்டனையை உறுதிப்படுத்துதல்

(iii) Sentence of death submitted to High Court
மரணதண்டனை குறித்து உயர்நீதிமன்றத்திடம் அறிக்கை சமர்பித்தல்

(iv) The sessions court issue the warrant for execution
செஷன்ஸ் நீதிமன்றம் மரண தண்டனையை நிறைவேற்ற ஆணை பிறப்பித்தல்

(A) (i) (ii) (iii) (iv)
(B) (iii) (ii) (i) (iv)
(C) (i) (iii) (ii) (iv)
(D) (ii) (i) (iii) (iv)
(E) Answer not known
விடை தெரியவில்லை

22. The Chief Judicial Magistrate may direct a warrant to any person within his local jurisdiction for the arrest of any
ஓர் குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவரானவர் தனது எல்கைக்குட்பட்ட அதிகார வரம்பிற்குள் எந்தவொரு நபரையும் கைது செய்ய நெறியுறுத்தலாம் அவர் ———— ஆக இருக்க வேண்டும்.

Find out the wrong one :
தவறான ஒன்றை கண்டறிக :

(A) Escaped convict
தண்டனையிலிருந்து தப்பிய குற்றவாளி

(B) Juvenile conflict with law
சட்டமுரணான சிறுவன்

(C) Proclaimed offender
தேடப்படும் குற்றவாளி

(D) Any person who is accused of a non-bailable offence and is evading arrest.
பிணையில் விட இயலாத குற்றமொன்றை செய்து-கைதில் இருந்து தப்பி திரியும் எந்த ஒரு நபரும்.

(E) Answer not known
விடை தெரியவில்லை

23. Section 428 of CrPC dealt with
குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 428 எதைப் பற்றி விளக்குகின்றது

(A) Levy of fine
அபராதம் விதிப்பது பற்றி

(B) Remission of Sentence
தண்டனை குறைப்பு பற்றி

(C) Suspension of execution of sentence
தண்டனையை நிறுத்தி வைத்தல் பற்றி

(D) Set-off of period of detention
முன்னதாக சிறையிலிருந்த காலத்தை தண்டனை காலத்திலிருந்து கழிப்பது பற்றி

(E) Answer not known
விடை தெரியவில்லை

24. Choose the Right answer among type which of the following statements are true about appeal?
சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது மேல்முறையீடு தொடர்பான கீழ்வரும் கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?

(i) Appeal dies with death of accused only
குற்றஞ்சாட்டபட்டவரின் இறப்பு மேல்முறையீட்டை அகற்றும்

(ii) Appeal dies with death of appellant only
மேல்முறையீட்டாளரின் இறப்பு மேல்முறையீட்டை அகற்றும்

(iii) No appeal shall be abated
மேல்முறையீடுகளை எந்த காரணிகளுக்காகவும் அகற்ற முடியாது

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

25. Conviction on plea of guilty in the absence of accused person is permissible in ———— Trial cases.
குற்றஞ்சாட்டபட்டவர் ஆஜராகமலேயே, குற்ற ஏற்புரை மூலமாக குற்றஞ்சாட்டபட்ட நபரை ———— வழக்கு விசாரணையின் போது தண்டனை வழங்கலாம்.

(A) Trial of warrant cases by Session Judge
பிடியாணை வழக்கு விசாரணை – அமர்வு நீதிபதி முன்பு

(B) Trial of warrant cases by Magistrate on the Police Report
காவல்துறையின் இறுதி அறிக்கையின் படி நீதித்துறை நடுவரால் நடத்தப்படும் பிடியாணை வழக்கு விசாரணை

(C) Trial of warrant cases by Magistrate otherwise on a Police Report
காவல்துறையின் அறிக்கை இல்லாமல் நீதித்துறை நடுவரால் நடத்தப்படும் பிடியாணை வழக்கு விசாரணை

(D) Trial of Summon cases by Magistrates
நீதித்துறை நடுவரால் நடத்தப்படும் அழைப்பாணை வழக்கு விசாரணை

(E) Answer not known
விடை தெரியவில்லை

26. A warrant of arrest may be executed at
கைது செய்வதற்கான பிடியாணையை எங்கு செயல்படுத்த முடியும்?

(A) Local jurisdiction of court only
நீதிமன்றத்தின் எல்லைக்குள் மட்டுமே

(B) Local jurisdiction of police station only
காவல் நிலையத்தின் எல்லைக்குள் மட்டுமே

(C) Jurisdiction of victim only
பாதிக்கப்பட்ட நபரின் எல்லைக்குள் மட்டுமே

(D) Any place in India
இந்தியாவிற்குள் எங்கு வேண்டுமானாலும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

27. U/S 6 of CrPC, there are ———— classes of criminal Courts.

கு.ந.மு. சட்டம், பிரிவு 6ன் படி, மொத்தம் ———— வகையான குற்றவியல் நீதிமன்றங்கள் உள்ளன.

(A) 5

(B) 6

(C) 3

(D) 4

(E) Answer not known
விடை தெரியவில்லை

28. Which rule of civil procedure code provides the procedure for filing of copies and to pay the requisite fees when the plaint is admitted by the court?

உரிமையியல் நடைமுறை சட்டத்தில் கீழ்கண்ட எந்த விதியானது பிராது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகின்றபோது அதனுடைய நகல்கள் சமர்ப்பிக்க மற்றும் அதற்க்குறிய தொகையினை செலுத்துவதற்க்குண்டான நடைமுறைகள் பற்றி விளக்குகிறது?

(A) Rule 8
விதி 8

(B) Rule 7
விதி 7

(C) Rule 9
விதி 9

(D) Rule 10
விதி 10

(E) Answer not known
விடை தெரியவில்லை

29. Match the following :
கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | A | | B |
|---|---|---|---|
| (a) | Plaint<br>வழக்குறை | 1. | Order 8, R-6A<br>கட்டளை 8, விதி 6A |
| (b) | Written Statement<br>எதிர்வழக்குறை | 2. | Order 8, R-6<br>கட்டளை 8, விதி 6 |
| (c) | Set-off<br>சரியீடு | 3. | Order 7<br>கட்டளை 7 |
| (d) | Counter claim<br>எதிர்பாத்திய கோரிக்கை | 4. | Order 8<br>கட்டளை 8 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

30. Match the following :

பின்வருவனவற்றை பொருத்துக :

| Provision<br>பிரிவுகள் | | Description<br>விளக்கம் |
|---|---|---|
| (a) ORXXI Rule 46 A<br>கட் 21 விதி 46(A) | 1. | Cost<br>செலவீனங்கள் |
| (b) ORXXI Rule 46 B<br>கட் 21 விதி 46(B) | 2. | Notice of garnishee<br>பற்றுகைக்கு உள்ளானவரின் சொத்தை வைத்திருப்பவருக்கு அறிவிப்பு |
| (c) ORXXI Rule 46 C<br>கட் 21 விதி 46(C) | 3. | Order against garnishee<br>பற்றுகைக்கு உள்ளானவரின் சொத்தை வைத்திருப்பவருக்கு எதிரான உத்தரவு |
| (d) ORXXI Rule 46 G<br>கட் 21 விதி 46(G) | 4. | Trial of Disputed question<br>தகராறுள்ள கேள்விகள் மீது விசாரணை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

31. Match the following :
கீழ்கண்டவற்றை பொருத்துக :

| A | | B |
|---|---|---|
| (a) Reference<br>சாட்டுகை | 1. | Sec. 115<br>பிரிவு 115 |
| (b) Second Appeal<br>இரண்டாம் மேல்முறையீடு | 2. | Sec. 114<br>பிரிவு 114 |
| (c) Review<br>மறுஆய்வு | 3. | Sec. 100<br>பிரிவு 100 |
| (d) Revision<br>சீராய்வு | 4. | Sec. 113<br>பிரிவு 113 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

32. Under CPC, the appellate court shall have a power
உரிமையியல் சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரம் என்பது

(a) To determine a case finally
வழக்கினை இறுதியாக முடிவுசெய்தல்

(b) Cannot frame issues and refer them for trial
வழக்கெழவினாவினை முனைய முடியாது மற்றும் விசாரணைக்கு அனுப்பமுடியாது

(c) To take additional evidence
கூடுதல் சாட்சியங்களை எடுக்கலாம்

(A) (a) and (c)
(a) மற்றும் (c)

(B) (a), (b) and (c)
(a), (b) மற்றும் (c)

(C) (a) only
(a) மட்டும்

(D) (a) and (b)
(a) மற்றும் (b)

(E) Answer not known
விடை தெரியவில்லை

33. Match the following :
கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | A | | B |
|---|---|---|---|
| (a) | Sec. 9<br>பிரிவு 9 | 1. | Bar to further suit<br>மீண்டும் வழக்குத் தொடர தடை |
| (b) | Sec. 10<br>பிரிவு 10 | 2. | Suits in Civil Nature<br>உரிமையில் தன்மைக் கொண்ட வழக்கு |
| (c) | Sec. 11<br>பிரிவு 11 | 3. | Res-subjudice<br>முன்தீர்ப்பு தடை கோட்பாடு |
| (d) | Sec. 12<br>பிரிவு 12 | 4. | Res-Judicata<br>இரு நீதிமன்றத்தில் ஒரே பரிகாரத்திற்கு வழக்குதாக்கல் தடை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

34. Publication and distribution of matter shall not be considered as contempt of court, if its is committed under
எதன் அடிப்படையில் வெளியிடப்படும் மற்றும் பகிரப்படும் சங்கதிகள் நீதிமன்ற அவமதிப்பு ஆகாது

(A) Good faith
நல்லெண்ண அடிப்படையில்

(B) Under influence
தகாநிலை வற்புறுத்தல்

(C) Coercion
மிரட்டுதலின்

(D) Misrepresentation
தவறான அறிவுறுத்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

35. Which section ———— of contempts of courts acts, 1971 deals with power of High court to punish contempts of subordinate courts?

நீதிமன்றங்கள் அவமதிப்பு சட்டம், 1971-ன் எந்த பிரிவு கீழமை நீதிமன்றங்களின் அவமதிப்பு குறித்து உயர்நீதிமன்றம் தண்டனை வழங்கும் அதிகாரம் உள்ளது என்று கூறுகிறது ?

(A) 2

(B) 3

(C) 4

(D) 10

(E) Answer not known
விடை தெரியவில்லை

36. No court shall initiate any proceedings for contempt ———— from the date on which the contempt is alleged to have been committed which is clearly mentioned under section 20 of CCA, 1971

எந்த ஒரு நீதிமன்றமும் நீதிமன்ற அவமதிப்பு நடந்த பொழுது நடவடிக்கை எடுக்காமலிருந்து ———— பிறகு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று பிரிவு 20, நீ.அ.ச. 1971-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) 6 months
6 மாதங்கள்

(B) 8 months
8 மாதங்கள்

(C) 9 months
9 மாதங்கள்

(D) after the expiry of a period of one year
ஒரு வருடம் முடிந்த பிறகு

(E) Answer not known
விடை தெரியவில்லை

37. An appeal for contempt of court can be filed before the Bench of the High Court, ———— from the date of the order received.
நீதிமன்ற அவமதிப்பு குறித்த மேல்முறையீடு வழக்கு உயர்நீதிமன்ற அமர்வின் முன்பு தீர்ப்பு வந்த ———— தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(A) within 30 days
30 நாட்களுக்குள்

(B) within 60 days
60 நாட்களுக்குள்

(C) within 20 days
20 நாட்களுக்குள்

(D) within 90 days
90 நாட்களுக்குள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

38. ———— of Judicial Act does not amount to contempt of court under section 5 of contempt of courts Act, 1971.
நீதிமுறைச் செயல் குறித்த ———— பிரிவு 5, நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டம், 1971-ல் கீழ் நீதிமன்ற அவமதிப்பாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

(A) Fair criticism
நேரிய திறனாய்வு

(B) Falsification of accounts
பொய்க் கணக்குகளைப் புனைதல்

(C) False information
பொய்யான தகவல்

(D) Propagation of false representation
பொய்யான உரையைப் பரப்புதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

39. "Trial of rape cases in camera should be the rule and open trial an exception" was observed in

"வன்புணர்வு வழக்குகளை நீதிமன்றம் ரகசியமாக விசாரணை செய்ய வேண்டும் என்பது விதி மற்றும் திறந்த நீதிமன்ற விசாரணை இதற்கு விதிவிலக்கு" என கூறப்பட்ட வழக்கு

(A) Naresh Shridhar Mirajkar-V-State of Maharastra
நரேஷ் ஸ்ரீதர் மிராஜ்கர்-எ-மஹாராஷ்டிர மாநிலம்

(B) Sahara India Real Estate Case
சகாரா இந்திய ரியல் எஸ்டேட் வழக்கு

(C) Aswini Kumar Ghose-V-Aravinda Bose
அஸ்வினி குமார் கோஸ்-எ-அரவிந்த போஸ்

(D) State of Punjab-V-Gurmit Singh
பஞ்சாப் மாநில அரசு-எ-குர்மிட் சிங்

(E) Answer not known
விடை தெரியவில்லை

40. Find the correct pair regarding contempt cognizanze.
நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வது தொடர்பாக கீழ்கண்டவற்றில் எது சரி?

(1) The High Court may take action suomoto.
உயர்நீதிமன்றம் தானாகவே முன்வந்து விசாரணை மேற்கொள்ளலாம்

(2) The High Court may take action by the Advocate-General.
மாநில தலைமை வழக்குரைஞரின் விண்ணப்பத்தின் பேரில்

(3) The High court may take action by any other person with the concert of Advocate General.
மாநில தலைமை வழக்குரைஞரின் அனுமதியுடன் எவரொருவரும் மனு தாக்கல் செய்யும்பட்சத்தில்

(A) (1) and (2) are correct
(1) மற்றும் (2) சரி

(B) (2) and (3) are correct
(2) மற்றும் (3) சரி

(C) (1) and (3) are correct
(1) மற்றும் (3) சரி

(D) All are correct
மேற்கண்டவை அனைத்தும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

41. Which of the following is Indirect Source of Law?
பின்வருவனவற்றில் எது சட்டத்தின் மறைமுக ஆதாரம்?

(A) Equity
நியாயம்

(B) Precedent
முன்தீர்ப்புகள்

(C) Bye – Laws
துணைச்சட்டங்கள்

(D) Ordinance
அவசர சட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

42. According to Hohfeld's Table of Jural concepts, what is the opposite for "Right"?
ஜூரல் கருத்துக்களின் ஹோபில்டு அட்டவணையின்படி, உரிமைக்கு எதிரானது எது?

(A) Duty
கடமை

(B) No – Right
உரிமையில்லை

(C) Liability
பொறுப்பு

(D) Disability
இயலாமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

43. According to whom, the precedents are merely interpretative of the existing law?
சாதாரணமாகவே முன்தீர்பானது நடைமுறைச் சட்டத்தினை விளக்ககூடியதாகவே கருதப்படுகிறது என்பது யாருடைய கூற்று?

(A) Bentham
பெந்தாம்

(B) Carter
கார்ட்டர்

(C) Blackstone's
ப்ளாக்ஸ்டோன்

(D) Austin
ஆஸ்டின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

44. The sentence "Constitutional Sovereignty is the supremacy of the Constitution" was pronounced in

"அரசியலமைப்பின் இறையாண்மை என்பதுதான் அரசமைப்பின் மேன்மைத் தன்மை" என்ற வாக்கியம் ________ வழக்கில் கூறப்பட்டது.

(A) Kalpana Mehta – Vs – Union of India
கல்பனா மேத்தா - எதிர் - இந்திய ஒன்றியம்

(B) M.C. Mehta – Vs – Union of India
M.C. மேத்தா – எதிர் – இந்திய ஒன்றியம்

(C) Sajjan Singh – Vs – Union of India
சஜ்ஜன் சிங் – எதிர் – இந்திய ஒன்றியம்

(D) Sankari Prasath – Vs – Union of India
சங்கரி பிரசாத் – எதிர் – இந்திய ஒன்றியம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

45. "The execution of death sentence by public hanging was held as barbaric and violative of Article 21 of the Indian Constitution" – enunciated in

"மரணதண்டனையை நிறைவேற்றும் பொருட்டு பொது இடத்தில் வைத்து தூக்கிலிடுதல் என்பது காட்டுமிராண்டித்தனமானதும், இந்திய அரசியலமைப்புச் சட்டம், உறுப்பு-21 ஐ மீறுவதுமாகும்" என்று ________ வழக்கில் கூறப்பட்டது.

(A) Kuljeet Singh – Vs – Union of India
குல்ஜீத் சிங் - எதிர் - இந்திய ஒன்றியம்

(B) Attorney General of India – Vs – Lacchmadevi
இந்திய தலைமை வழக்குரைஞர் - எதிர் - லட்சுமாதேவி

(C) Daya Singh – Vs – Union of India
தயா சிங் - எதிர் - இந்திய ஒன்றியம்

(D) Mahendra Nath – Vs – State of Assam
மகேந்திர நாத் - எதிர் - அஸ்ஸாம் அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

46. In the classification of legal right which is not correct?
உரிமைகளின் வகைபாடுகளில் எது சரியானது அல்ல?

(a) Positive right
நேர்மறையான உரிமை

(b) Negative right
எதிர்மறையான உரிமை

(c) Right in rem
பொதுபடையான உரிமை

(d) Primary and Secondary
முதன்மை மற்றும் இரண்டாம் நிலையானது

(A) (a) and (b)
(a) மற்றும் (b)

(B) (a), (b) and (c)
(a), (b) மற்றும் (c)

(C) (d) only
(d) மட்டும்

(D) (b) only
(b) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

47. Who observed that title means any fact which creates a right or duty?
உரிமை மூலம் என்பது ஓர் உரிமையையோ அல்லது ஒரு கடமையையோ உருவாக்கக் கூடிய எந்த ஒரு பொருண்மையும் ஆகும் என கூறியவர்

(A) Bentham
பெந்தம்

(B) Justice Holmes
ஜஸ்டிஸ் ஹோல்ம்ஸ்

(C) Salmond
சால்மண்டு

(D) Holland
ஹாலண்ட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

48. For a dead man, which of the following has no legitimate expectation to take care of it?
ஒரு இறந்த மனிதனுக்கு, பின்வருவனவற்றில் எது அதை கவனித்துக் கொள்வதற்கு நியாயமான எதிர்பார்ப்பு இல்லை?

(A) His Body
அவரது உடல்

(B) His Reputation
அவரது புகழ்

(C) His Estate
அவரது சொத்து

(D) To construct and maintain his own tomb
அவரது சொந்த கல்லறையை உருவாக்க மற்றும் பராமரிக்க

(E) Answer not known
விடை தெரியவில்லை

49. If a property is transferred to a person upon a condition that he shall be entitled to possession only when he attains the age of 21 is called as
ஒரு நபருக்கு 21 வயதை அடையும்போது மட்டுமே அவர் உடைமைக்கு தகுதியுடையவர் என்ற நிபந்தனையின் பேரில் ஒரு நபருக்கு சொத்து மாற்றப்பட்டால், அதற்கு பெயர்

(A) Vested Right
வகுக்கப்பட்ட உரிமை

(B) Private Right
தனிப்பட்ட உரிமை

(C) Positive Right
நேர்மறை உரிமை

(D) Contingent Right
வருநிகழ்வு சார்ந்த உரிமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

50. Who supported the economic principle of "Laissez Faire"?
"தலையிடாக் கொள்கை" என்னும் பொருளாதாரக் கோட்பாட்டை ஆதரித்தவர் யார்?

(A) Bentham
பெந்தம்

(B) Austin
ஆஸ்டின்

(C) Holland
ஹாலண்ட்

(D) Salmond
சால்மண்ட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

51. Who has written the book namely 'A plea for the constitution'?
'அரசியலமைப்பிற்க்கான வேண்டுகோள்' என்ற புத்தகத்தினை இயற்றியவர் யார்?

(A) Holland
ஹாலண்ட்

(B) Prof. Grey
பேராசிரியர். கிரே

(C) Bentham
பெந்தாம்

(D) Austin
ஆஸ்டின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

52. "Lifting the corporate veil" ensured that
"கூட்டுரு அங்கியை தூக்குதல்" என்பது ________ ஐ உறுதிப்படுத்தும்.

(i) Transparent Administration
வெளிப்படையான நிருவாகத்தை

(ii) Express the true character of company
கம்பெனியின் உண்மையான குணநலனை

(iii) Fined out the fraud of company
கம்பெனி செய்த மோசடியை வெளிக்கொணருதலை

(iv) Removal of the General Manager
பொது மேலாளரை நீக்குவதை

Find out the wrong answer :

தவறானதை கண்டறிக :

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) only
(iii) மட்டும்

(D) (iv) only
(iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

53. In the matters of child custody, the writ of Habeas Corpus is maintainable was held in which case law?
குழந்தை காப்பகம் தொடர்பான விஷயங்களில் ஆட்கொணர் நீதிப்பேராணையானது பராமரிக்கத்தக்கது என்று எந்த வழக்கில் முடிவு செய்யப்பட்டது?

(A) State of M.P. V G.C. Mandawa
எம்.பி. மாநிலம் எதிர் ஜு.சி. மண்டாவா

(B) Nanda Kumar V State of Kerala
நந்தகுமார் எதிர் கேரளா அரசு

(C) Tejaswi Garud V Shekhar Jagdish Prasad Tewari
தேஜஸ்வி கருட் எதிர் சேகர் ஜகதீஷ் பிரசாத் திவாரி

(D) Icchu Devi Vs Union of India
இச்சு தேவி எதிர் இந்திய ஒன்றியம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

54. "When people start practising something from time to time and when it is continued for immemorial time, it obtains force of Law" – Observed in
"மக்கள் ஏதாவது வழக்காறினை அடிக்கடி, தொடர்ந்து, காலங்காலமாக பழக்கப்படுத்தும் பட்சத்தில், அது சட்ட வலிமையைப் பெறுகிறது" என்று கூறப்பட்ட வழக்கு

(A) Tucker – Vs – Linker
டுக்கர் - எ - லிங்கர்

(B) Arasabulla – Vs – Kiamtulla
அரசபுல்லா - எ - கியாம்துல்லா

(C) Brvantt – Vs – Foot
ப்ருவன்ட் - எ - ஃபூட்

(D) Tamistry case
டாமிஸ்ட்ரி வழக்கு

(E) Answer not known
விடை தெரியவில்லை

55. In which country, the system of plea bargaining originated?
"வழக்கு பேரம் பேசுதல் முறை" எந்நாட்டில் உருவானது?

(A) France
பிரான்ஸ்

(B) Britain
பிரிட்டன்

(C) U.S
அமெரிக்கா

(D) Japan
ஜப்பான்

(E) Answer not known
விடை தெரியவில்லை

56. Who criticised the Blackstone theory of Judges do not make the law?
நீதிபதிகள் சட்டத்தினை உருவாக்க இயலாது என்ற ப்ளாக்ஸ்டோனின் கோட்பாட்டினை யார் விமர்சித்தார்?

(A) Hobbes and John Finnis
ஹோப்ஸ் மற்றும் ஜான் பின்னிஸ்

(B) Salmond and Kelson
சால்மண்ட் மற்றும் கெல்சன்

(C) Bentham and Austin
பெந்தாம் மற்றும் ஆஸ்டின்

(D) Marshall and Homes
மார்சல் மற்றும் ஹோம்ஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

57. Who said that laws are the creation of climate and local situations?
சட்டங்கள் காலநிலை மற்றும் உள்ளூர் சூழ்நிலையை கொண்டு உருவாக்கப்படுகின்றன என்று யார் சொன்னார்?

(A) Montesquieu
மான்டெஸ்கியூ

(B) Sir Henry Maine
சர் ஹென்றி மெய்ன்

(C) Kelson
கெல்சன்

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) ஆகிய இரண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

58. Who emphasized "Inner morality of Law"?
"சட்டத்தின் உள் ஒழுக்கத்தை" வலியுறுத்தியவர் யார்?

(A) Dr. Jethro Brown
Dr. ஜெத்ரோ ப்ரவ்ன்

(B) Gustav Radbruch
கஸ்டவ் ராட்ப்ரூச்

(C) Gueist
கூயிஸ்ட்

(D) Bruns
ப்ரன்ஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

59. Who defines that the Jurisprudence as the science of first principles of civil law?
உரிமையியல் சட்டத்தின் முதல் கொள்கைகளின் விஞ்ஞானமாக நீதியியல் சாஸ்திரம் கருதப்படுகிறது என்று யார் விளக்குகிறார்?

(A) Julious Stone
ஜூலியஸ் ஸ்டோன்

(B) Allen
ஆலன்

(C) Keeton
கீட்டான்

(D) Salmond
சாலமண்ட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

60. According to John Austin's theory of law which of the following is not an element of law?
ஜான் ஆஸ்டினின் சட்டக் கோட்பாட்டின் படி பின்வருவனவற்றில் எது சட்டத்தின் உறுப்பு அல்ல?

(A) Command
கட்டளை

(B) Duty
கடமை

(C) Sanctions
தண்டனை

(D) Right
உரிமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

61. Find out the odd one :
தவறான ஒன்றைக் கண்டுபிடிக்கவும் :

The cardinal rules of the Law of Evidence
சாட்சிய சட்டத்தின் மூல விதிகள்

(A) Presumption of fact
பொருண்மைத் துணிபு

(B) Evidence must be confined to the matters in issue
நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சாட்சியமானது வழக்கெழு வினாவிற்கு தொடர்பு கொண்டிருக்க வேண்டும்

(C) Best evidence must be given in all cases
அனைத்து வழக்குகளிலும் மிகச் சிறந்த சாட்சியமே வழங்கப்பட வேண்டும்

(D) Hear say evidence need not be admitted
கேள்வி நிலைச் சாட்சியம் அனுமதிக்கக் கூடாது

(E) Answer not known
விடை தெரியவில்லை

62. Documents ———— with ———— are said to prove themselves under section 90 of Indian Evidence Act, 1872.
இந்திய சாட்சியச் சட்டம், 1872–ன் பிரிவு 90–ன் படி ஒரு ஆவணம் உருவாகி ———— அது ———— சமர்ப்பிக்கப்பட்டால், அந்த ஆவணம் தன்னைத் தானே நிருபித்துக் கொள்கின்றன.

(A) Thirty years old, proper custody

30 ஆண்டுகளாகி, முறையான பாதுகாப்பிலிருந்து

(B) Twenty years old, proper custody

20 ஆண்டுகளாகி, முறையான பாதுகாப்பிலிருந்து

(C) Fifteen years old, proper custody

15 ஆண்டுகளாகி, முறையான பாதுகாப்பிலிருந்து

(D) Five years old, proper custody

5 ஆண்டுகளாகி, முறையான பாதுகாப்பிலிருந்து

(E) Answer not known
விடை தெரியவில்லை

63. Under which provision of the Indian Evidence Act, 1872, the evidence given in former proceedings is relevant?
இந்திய சாட்சியச் சட்டம் 1872, எந்த சூழ்நிலைகளில் நீதிமுறை நடவடிக்கை ஒன்றில் ஒரு சாட்சியினால் கொடுக்கப்பட்ட சாட்சியம் பின்னர் வரும் ஒரு நீதிமுறை நடவடிக்கையில் தொடர்புடையதாகும்?

(A) Section 32
பிரிவு 32

(B) Section 33
பிரிவு 33

(C) Section 34
பிரிவு 34

(D) Section 35
பிரிவு 35

(E) Answer not known
விடை தெரியவில்லை

64. Match the following :

சரியான இணையைத் தெரிவு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | R.v. Richardson<br>ஆர் எதிர் ரிச்சர்ட்சன் | 1. | Motive, preparation and conduct<br>உட்கருத்து, குற்றம் புரிய தயாராகுதல் மற்றும் நடத்தை |
| (b) | Mercantail Bank of India v. Central Bank of India<br>மொர்கன்டைல் பேங்க் ஆப் இந்தியா எதிர் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா | 2. | Estoppel<br>முரண் தடை |
| (c) | Narendra Nath Pahari v. Ram Govind Pahari<br>நரேந்திரநாத் பகாரி எதிர் ராம் கோவிந் பகாரி | 3. | Presumption of legitimacy of child<br>முறைதார மணத்தில் பிறந்த குழந்தை |
| (d) | Abdul Rahman v. State of Mysore<br>அப்துல் ரஹ்மான் எதிர் மைசூர் அரசு | 4. | Expert opinion<br>வல்லுநர் கருத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known

விடை தெரியவில்லை

65. Find out the wrong statements:
தவறான கூற்றை கண்டறிக.

(i) As per the M.V. Act 1988- claims petition filed without court fee.

1988 இயக்க ஊர்திகள் சட்டப்படி இழப்பீடு கோரும் விண்ணப்பங்களுக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த தேவையில்லை.

(ii) Prior 1988 M.V. Act. The motor accident claims filed before Civil Court.

1988 இ. ஊ. சட்டம் வருவதற்கு முன் இயக்க ஊர்தி விபத்து இழப்பீடு கோரும் விண்ணப்பங்கள் உரிமையியல் நீதிமன்றத்தின் முன் சமர்பிக்கப்பட வேண்டும்

(iii) Prior 1988 M.V. Act motor accident claims filed as a suit for declaration.

1988 இ. ஊ. சட்டம் வருவதற்கு முன் விபத்து இழப்பீடு கோரிக்கை மனுக்கள் – விளம்புகை பரிகாரம் கோரும் - விண்ணப்பமாக தாக்கல் செய்யப்படும்.

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (iii) only
(iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

66. Which of the following is incorrectly paired with reference to motor Vehicles Act 1988?
பின்வருவனவற்றில் மோட்டார் வாகனச் சட்டம் 1988 உடன் தவறாக இணைக்கப்பட்டது எவை?

(1) Section 86 – Cancellation of permit
பிரிவு 86 அனுமதி ரத்து

(2) Section 113 – Limits of speed
பிரிவு 113 வேக வரம்புகள்

(3) Section 145 – Third party Insurance
பிரிவு 145 மூன்றாம் நபர் காப்பீடு

(4) Section 165 – Claims tribunal
பிரிவு 165 உரிமைகோரல் தீர்ப்பாயம்

(A) (2) and (3)
(2) மற்றும் (3)

(B) (1) and (3)
(1) மற்றும் (3)

(C) (3) and (4)
(3) மற்றும் (4)

(D) (1) and (2)
(1) மற்றும் (2)

(E) Answer not known
விடை தெரியவில்லை

67. Under the M.V Act 1988 No appeal by the person who is required to pay an amount in terms of such award shall be entertained by the High court unless he has deposited with it Rs. ———— or ———— % of the amount awarded. Whichever is less.

1988 – இயக்க ஊர்திகள் சட்டத்தின் கீழ் உயர்நீதிமன்றம் தீர்புரையில் கூறப்பட்ட இழப்பீட்டுத் தொகையில் ரூ. ———— அல்லது ———— சதவீதம் அதில் எந்த தொகை குறைவாக உள்ளதோ அதை செலுத்திய பின்பு தான் மேல்முறையீட்டை விசாரணைக்கு அனுமதிக்க இயலும் என மறுக்கலாம்.

(A) Rs.25,000/- (or) 50%
ரூ. 25,000 அல்லது 50%

(B) Rs.1 lakh (or) 75%
1 லட்சம் ரூபாய் அல்லது 75%

(C) Rs. 50,000/- (or) 50%
ரூ. 50,000 அல்லது 50%

(D) Rs. 25,000/- (or) 75%
ரூ. 25,000 அல்லது 75%

(E) Answer not known
விடை தெரியவில்லை

68. The scheme of golden hour enables the victims of accidents to claim ———— under the Motor Vehicles (Amendment) Act, 2019.

விபத்தில் பாதிப்படைந்த நபர், "பொற்காலம்" எனப்படும் திட்டத்தின் மூலம் ———— உதவிகளை பெற முடியும் என்று மோட்டார் வாகன (திருத்த) சட்டம், 2019 ல் கூறுகின்றது.

(A) Cashless treatment
கட்டணமில்லா சிகிச்சை

(B) Treatment in private hospital with cost
தனியார் மருத்துவமனையில் கட்டணத்துடன் சிகிச்சை

(C) Treatment in government hospital with cost
அரசு மருத்துவமனைகளில் கட்டணத்துடன் சிகிச்சை

(D) Treatment in outside India
இந்தியாவிற்கு வெளியே சிகிச்சை

(E) Answer not known
விடை தெரியவில்லை

69. The Consumer Protection Act-2019 declared ———— is an offence.
2019 நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் படி ———— குற்றமாக்கப்பட்டுள்ளது.

(A) Misleading advertisement

தவறாக வழிநடத்தக்கூடிய விளம்பரம்

(B) Exporting adulterant products

கலப்படம், செய்யப்பட்ட தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வது

(C) Exporting spurious goods

ஊறு விளைவிக்கும் பொருட்களை ஏற்றுமதி செய்வது

(D) Disposed the adulterant (or) spurious products (or) goods

கலப்பட தயாரிப்பு அல்லது ஊறு விளைவிக்கும் தயாரிப்பு அல்லது பொருட்களை அழிப்பது

(E) Answer not known
விடை தெரியவில்லை

70. Match the following :

கீழ்கண்டவற்றை பொருத்துக :

(a) Consumer protection councils — 1. Chapter V
நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்கள் — அத்தியாயம் V

(b) Central authority — 2. Chapter II
மத்திய அதிகாரி — அத்தியாயம் II

(c) Mediation — 3. Chapter VII
சமரசம் — அத்தியாயம் VII

(d) Offences — 4. Chapter III
குற்றங்கள் — அத்தியாயம் III

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

71. The Consumer Protection Act-2019 is extends to ———
நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் –2019 ஆனது பொருந்தக்கூடிய பகுதி

(A) Except the state of Jammu and Kashmir
ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக

(B) This Act is applicable to Ladakh Union territory only
லடாக் யூனியன் பிரதேசத்திற்கு மட்டும்

(C) This Act is applicable to Jammu and Kashmir Union territory (except Ladakh)
ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசம் (லடாக் யூனியன் பிரதேசம் நீங்கலாக)

(D) To union territory of Ladakh/Jammu and Kashmir (after 30th Oct 2019)
யூனியன் பிரதேசமான லடாக்/ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு (30 அக்டோபர் 2019 க்கு பின்னாக)

(E) Answer not known
விடை தெரியவில்லை

72. As per the section 8 of IPC the pronoun "he" and its derivatives are used of any person whether
இ.த.ச. பிரிவு 8ன் படி "அவன்" என்ற சுட்டுச்சொல் மற்றும் அதன் பொருள் குறிப்பதாவது

(A) Male
ஆண்

(B) Female
பெண்

(C) Male (or) Female
ஆண் அல்லது பெண்

(D) Person
நபர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

73. "Public Servant" includes
பொது ஊழியர் என்பதனுள் உள்ளடக்குபவர்கள்

(i) Any officer appointed by State Government
மாநில அரசால் பணி நியமனம் செய்யப்படும் எந்தவொரு அதிகாரி

(ii) Any servant employed by Union Government
ஒன்றிய அரசால் வேலைக்கமர்த்தப்படும் எந்தவொரு வேலையாள்

(iii) Ambassador appointed by Foreign nation
அயல்நாட்டால் பணியமர்த்தப்படும் தூதுவர்

(iv) High commissioner appointed by Indian Government
இந்திய அரசால் நியமிக்கப்படும் ஹை–கமிஷனர்கள்

Find out correct answer
சரியான விடையை தேர்க

குறித்த வகை நிவாரணச் சட்டம்

(B) Civil Procedure Code
உரிமையியல் நடைமுறைச் சட்டம்

(C) Criminal Procedure Code
குற்றவியல் நடைமுறைச் சட்டம்

(D) Limitation Act
கால வரையறை சட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

147. Which is/are the duty/duties of gratuitous bailor?
கீழ்கண்டவற்றுள் எவை/எது கைமாறற்ற ஒப்படைவு செய்பவரின் கடமை/கடமைகள்?

(i) Bound to disclose the faults of the goods to bailee.
ஒப்படைவு பெறுபவரிடம் சரக்குகளின் குறைகளை வெளிப்படுத்த வேண்டும்.

(ii) Bound to disclose the extraordinary risks.
ஒப்படைவு செய்யும் பொருட்களில் அசாதாரணமான அபாயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

(iii) The bailor is responsible for damage of goods even though he was not aware of faults in the goods bailed.
ஒப்படைவு செய்த பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டால் ஒப்படைவு செய்பவரே பொறுப்பாவார், அவர் ஒப்படைவு செய்த பொருட்களின் தவறுகள் பற்றி அறியவில்லை எனினும்

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

148. As per section 128 of the Indian Contract Act, the liability of surety is
இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 128 ன் படி பிணையாளரின் பொறுப்பு நிலையானது

(A) Contingent
வருநிகழ்வு சார்ந்தது

(B) Co-extensive
உடன் இணைந்தது

(C) Limited
வரையறுக்கப்பட்டது

(D) Unlimited
வரையறுக்கப்படாதது

(E) Answer not known
விடை தெரியவில்லை

149. Under Article 91(b) of Limitation Act, 1963, the prescribed limitation period to file a suit for unlawful detention of property is

கால வரையரைச் சட்டம் சரத்து 91(b), 1963–ன் கீழ் சொத்துக்களை சட்ட விரோதமாக காவலில் வைத்திருப்பதற்கான வழக்கு தாக்கல் செய்ய பரிந்துரைக்கப்பட்ட கால வரம்பு

(A) Five Years
ஐந்து வருடங்கள்

(B) Eight Years
எட்டு வருடங்கள்

(C) Three Years
மூன்று வருடங்கள்

(D) Eighteen Years
பதினெட்டு வருடங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

150. Among the following which does not have general lien?

கீழ்கண்டவற்றுள் யாருக்கு பொது பற்றுரிமை கிடையாது?

(A) Bailee
ஒப்படைவு பெறுபவர்

(B) Factor
தரகு வணிகர்

(C) Banker
வங்கியர்

(D) Wharfinger
கப்பல் சரக்கு மேடைக்கு உரியவர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

151. Which among the following lease is yearly terminable?

பின்வரும் குத்தகைகளில் வருடாந்திர குத்தகையாக முடிவுறுவது எது?

(A) Agricultural Lease
விவசாய குத்தகை

(B) Housing Lease
வீட்டு குத்தகை

(C) Shop Lease
கடை குத்தகை

(D) Sub – Lease
உள் வாடகை

(E) Answer not known
விடை தெரியவில்லை

152. Which among the following remedy for Usufructuary mortgage
பின்வரும் தீர்வழிகளில் சுவாதீன அடைமானத்திற்கான தீர்வழி எது ?

(A) Judicial sale
நீதிமன்ற விற்பனை

(B) Private sale
தனியார் விற்பனை

(C) Foreclosure
அடைமான மீட்புரிமை அடைப்பு

(D) None of the above
ஏதுமில்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

153. Choose the correct matches among the following :
கீழ்கண்டவற்றுள் சரியான இணையினை தேர்ந்தெடுக்கவும் :

(i) Section 60 – Doctrine of Redemption
பிரிவு 60 – மீட்புரிமை கோட்பாடு

(ii) Section 78 – Doctrine of Priority
பிரிவு 78 – முந்துரிமை கோட்பாடு

(iii) Section 81 – Doctrine of Contribution
பிரிவு 81 – விகித பொறுப்பு கோட்பாடு

(iv) Section 92 – Doctrine of Subrogation
பிரிவு 92 – மாற்றமர் அடைமான கோட்பாடு

(A) (i), (ii), (iii) are correct
(i), (ii) மற்றும் (iii) சரியானது

(B) (i), (iii), (iv) are correct
(i), (iii) மற்றும் (iv) சரியானது

(C) (i), (ii), (iv) are correct
(i), (ii) மற்றும் (iv) சரியானது

(D) (ii), (iii), (iv) are correct
(ii), (iii) மற்றும் (iv) சரியானது

(E) Answer not known
விடை தெரியவில்லை

154. Which among the following can be created by Act of Parties?
பின்வருவனவற்றுள் தரப்பினரின் செயல்பாட்டின் மூலம் மட்டுமே ஏற்படுத்தக் கூடியது எது?

(A) Contract
ஒப்பந்தம்

(B) Mortgage
அடைமானம்

(C) Charge
பொருப்பினை பொறுப்பு

(D) Inheritance
வாரிசுரிமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

155. The principle of "Once a Mortgage is always a mortgage" was evolved in
"ஒருமுறை அடைமானம் என்றாலே, என்றுமே அது அடைமானம் தான்" என்ற கோட்பாடு கீழ்கண்ட எந்த வழக்கில் பரிணாமித்தது?

(A) Lakshmi Vs. Krishna
லட்சுமி – எதிர் – கிருஷ்ணா

(B) Venkata Vs. Parvathi
வெங்க்கடா – எதிர் – பார்வதி

(C) Stanley Vs. Wilde
ஸ்டான்லி – எதிர் – வொய்ல்டு

(D) Rice Vs. Noakes
ரைஸ் – எதிர் – நோயக்ஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

156. Lord Davey in Noakes & Co Vs Rice interpreted about which of the following?

நோக்ஸ் & கோ எதிர் ரைஸ் வழக்கில் லார்ட் டேவியின் பொருள் விளக்கம் எது குறித்தானது ?

(A) Contribution is the reverse of marshalling

பங்களிப்பு என்பது மார்ஷலிங்கின் எதிர்மறையாகும்

(B) The law abhors a forfeiture

பறிமுதலை, சட்டம் வெறுக்கிறது

(C) Once a mortgage is always a mortgage

ஒரு முறை அடைமானமெனில் என்றும் அது அடைமானமே

(D) Redeem up and foreclosure down

மேலிருந்து கீழாக அடைமான மீட்புரிமை அடைப்பு செய்க

(E) Answer not known

விடை தெரியவில்லை

157. Match the following :

கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Negotiable Instrument<br>மாற்றுமுறை ஆவணம் | 1. | Section 12<br>பிரிவு 12 |
| (b) | Ambiguous Instrument<br>தெளிவில்லாத ஆவணம் | 2. | Section 11<br>பிரிவு 11 |
| (c) | Foreign Instrument<br>வெளிநாட்டு ஆவணம் | 3. | Section 13<br>பிரிவு 13 |
| (d) | Inland Instrument<br>உள்நாட்டு ஆவணம் | 4. | Section 17<br>பிரிவு 17 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

158. Right of usufructuary mortgagor to recover possession is dealt under section ———— of the transfer of property Act.
அடைமானம் வைத்தவர், சுவாதீன அடைமானத்தில் உடைமைகளை மீட்பதற்கான உரிமைகளை வழங்கும் சொத்துரிமை மாற்றுச் சட்டப்பிரிவு

(A) Section 62
பிரிவு 62

(B) Section 63
பிரிவு 63

(C) Section 64
பிரிவு 64

(D) Section 65A
பிரிவு 65A

(E) Answer not known
விடை தெரியவில்லை

159. Section 94 of the transfer of property Act, 1882 deals with
சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 பிரிவு 94 எதைப் பற்றி விளக்குகிறது?

(A) Doctrine of subrogation
மாற்றமர் அடைமான உரிமை கோட்பாடு

(B) Prohibition of taking
முன்னொட்டு அடைமான தடை

(C) Rights of Mesne mortgagee
இடைப்பட்ட அடமானங்களின் உரிமை

(D) Right of pre-emption
அடைமான வாங்கும் முன்னுரிமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

160. The definition of mortgage under transfer of property act is given under
அடைமானம் குறித்த வரையறை சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் எந்த பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது?

(A) Section 55
பிரிவு 55

(B) Section 58
பிரிவு 58

(C) Section 57
பிரிவு 57

(D) Section 56
பிரிவு 56

(E) Answer not known
விடை தெரியவில்லை

161. The scope of Industry had been considered and laid down the Triple test in Bangalore water supply vs A. Rajappa, has practically reiterated the test laid down in ———— case.
பெங்களூர் வாட்டர் சப்ளை எதிர் ராஜப்பா என்ற வழக்கில் தொழிற்துறையின் நோக்கம் பரிசீலிக்கப்பட்டு, மும்முறை பரிசோதனை முறைமையை மீண்டும் எந்த வழக்கின் அடிப்படையில் வலியுறுத்தப்பட்டது?

(A) State of Bombay vs Bombay Hospital Mazdoor sabha.
ஸ்டேட் ஆப் பாம்பே எதிர் பாம்பே ஹாஸ்பிட்டல் மஸ்தூர் சங்கம்

(B) Management of Safadarjang Hospital, Delhi vs Kuldip Singh.
ஸபதர்ஜங் ஹாஸ்பிட்டல் நிர்வாகம், டெல்லி எதிர் குல்தீப் சிங்

(C) Dhanrajgiri Hospital vs workmen
தன்ராஜ்கிரி ஹாஸ்பிட்டல் எதிர் பணியாளர்

(D) Harinagar cane farm vs state of Bihar
ஹரிநகர் கேன் பார்ம் எதிர் ஸ்டேட் ஆப் பீகார்

(E) Answer not known
விடை தெரியவில்லை

162. A workman shall be in a continuous service, including the service which may be interrupted on the account of
கீழ்க்கண்ட எந்த காரணத்தினால் இடையூறு ஏற்பட்டாலும் ஒரு தொழிலாளியின் தொடர்ச்சியான பணி என்பது கணக்கில் கொள்ளப்படும்

(A) Sickness
நோய் வாய்பட்டால்

(B) Accident
விபத்து ஏற்பட்டால்

(C) (A) and (B)
(A) மற்றும் (B)

(D) Unauthorised leave
அதிகாரபூர்வமற்ற விடுப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

163. Arrange the following in chronological order
கீழ்கண்டவற்றை காலவரிசைப்படி வரிசைபடுத்துக.

(i) Delhi university V. Ram Nath
டெல்லி பல்கலைகழகம் எதிர். ராம் நாத்

(ii) Management of Safdar Jung Hospital New Delhi V. Kuldeep Singh Sethi
நிர்வாகம் சப்த்தர்ஷங்க் மருத்துவமனை, புதுடெல்லி எதிர் குல்தீப் சிங் சேத்தி

(iii) State of Bombay V. Hospital Mazdoor Sabha
பம்பாய் மாநிலம் எதிர் ஹஸ்பிடல் மஸ்தூர் சபா

(iv) Dhanraj Giriraj Hospital V. Workman
தன்ராஜ் கிரிராஜ் மருத்துவமனை எதிர். தொழிலாளர்கள்

(A) (iii), (i), (ii), (iv)
(B) (i), (iii), (iv), (ii)
(C) (ii), (i), (iv), (iii)
(D) (iv), (ii), (i), (iii)
(E) Answer not known
விடை தெரியவில்லை

164. Which does not constitute industry under the Industrial Disputes Act, 1947?
தொழிற்தகராறுகள் சட்டம், 1947ன் கீழ் எத்துறை தொழிற்சாலையாக கருதப்படாது?

(A) Tourism Department
சுற்றுலா துறை

(B) Railways Department
இரயில்வே துறை

(C) National Highways Department
தேசிய நெடுஞ்சாலை துறை

(D) Dock Labour Board
கப்பல் துறை தொழிலாளர் வாரியம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

165. "During the pendency of the Industrial Dispute before the adjudicating forum the corporation is prevented from terminating the employment a of workman" held in

"தொழிற்தகராறு பிரச்சனை தீர்பாங்களில் நிலுவையில் உள்ளபோது, ஒரு நிறுவனம் அதன் தொழிலாளியை வேலை நீக்கம் செய்யும் உத்தரவு தடுக்கப்படுகிறது" என்ற தீர்ப்பு இவ்வழக்கில் பகரப்பட்டது

(A) Shankar v. Britannia Biscuit Co.,
சங்கர் எதிர் பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி

(B) ONGC Ltd., v. Petroleum coal Labour union
தேசிய எண்ணெய் மற்றும் வாயு பொருள் நிறுவனம் எதிர் பெட்ரோலியம் நிலக்கரி தொழிலாளர் சங்கம்

(C) E & T co., v. Baldev Lal
E & T கம்பெனி எதிர் பால்தேவ் லால்

(D) Punjab Bevarages v. Suresh Chand
பஞ்சாப் பிவரேஜ்ஜஸ் எதிர் சுரேஷ் சந்து

(E) Answer not known
விடை தெரியவில்லை

166. Under Sec. 15 of the Industrial Employment (Standing Orders) Act, 1946 ————Government is having power the make the rule regarding this Act.

தொழிற்சாலை பணியாளர் (நிலையாணை) சட்டம் 1946 பிரிவு 15ன் கீழ், இச்சட்டம் குறித்த விதிமுறைகளை உருவாக்க எந்த அரசுக்கு அதிகாரம் உள்ளது.

(A) Central Government
நடுவன் அரசு

(B) State Government
மாநில அரசு

(C) Appropriate Government
உரிய அரசு

(D) Local Government
உள்ளாட்சி அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

167. Under section 13-A. of the Industrial Employment standing orders Act, 1946, any employer, or workman or trade union want to know any clarification regarding question about this Act, may approach the

தொழிற்சாலை பணியாளர் (நிலையாணைகள்) சட்டம் 1946 பிரிவு 13-A வின் படி இந்த சட்டம் குறித்து ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால் முதலாளியோ, பணியாளரோ, தொழிற்சங்கமோ ———————— அணுகலாம்.

(A) Arbitration under the Industrial Dispute Act, 1947

தொழிற்தகராறு சட்டம் 1947ன் கீழ் "இசைவு தீர்பாளர்"

(B) Civil Court under the Civil procedure code 1908

உரிமையியல் நடைமுறை சட்டம் 1908 கீழ் உரிமையியல் நீதிமன்றம்

(C) Labour court under the Industrial Dispute Act, 1947

தொழிற்தகராறு சட்டம் 1947ன் கீழ் "தொழிலாளர் நீதிமன்றம்"

(D) High Court under Article 226 of the constitution

அரசியல் அமைப்பு சட்டம் ஷரத்து 226ன் கீழ் உயர் நீதிமன்றம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

168. Which one of the following is not provided by the Industrial Employment (standing orders) Act 1946?

பின்வருவனவற்றில் எது தொழிற்சாலை வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம் 1946-ஆல் வழங்கப்படவில்லை?

(A) Employer

பணி வழங்குநர்

(B) Industrial establishment

தொழிலக அமைப்பு

(C) Lay-off

தொழிலை நிறுத்தி வைத்தல்

(D) Certifying officer

சான்றிதழ் வழங்கும் அதிகாரி

(E) Answer not known

விடை தெரியவில்லை

169. In which case the supreme court held that "The society had a vital interest in the settlement of term of employment of industrial Labour and it become tripartite, state representing the society".

"தொழிலக பணியாளர்களின் பணி நிபந்தனைகளை நிர்ணயிப்பதில் சமூகத்திற்கு ஒரு முக்கிய பங்குள்ளது. அது முத்தரப்பாக மாற்றமடைகிறது. சமூகத்தினை அரசு பிரதிநிதித்துவபடுத்துகிறது" என்று எந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

(A) Dimakuchi Tea Estate v. Workmen.

திம்மகுச்சி டீ எஸ்டேட் எதிர் பணியாளர்கள்

(B) Western India Match Co., v. Workmen

வெஸ்டர்ன் இந்தியா மேட்சு கம்பெனி எதிர் பணியாளர்கள்

(C) Tata chemicals v. Workmen

டாடா கெமிக்கள் எதிர் பணியாளர்கள்

(D) I.S. Institution v. Workmen

ஐ.எஸ். இன்ஸ்டிடுயுசன் எதிர் பணியாளர்கள்

(E) Answer not known

விடை தெரியவில்லை

170. The Industrial Employment (Standing orders) Act, 1946 is not applicable to industrial establishment with

தொழிலகப் பணி (நிலையாணைகள்) சட்டம், 1946 பொருந்தாத தொழிற்சாலைகளானது உடையது

(A) 100 workmen

100 தொழிலாளர்கள்

(B) More than 100 workmen

100 மேற்பட்ட தொழிலாளர்கள்

(C) Two months Government Notice

இரண்டு மாத அரசாங்க அறிவிப்பு

(D) Civil Services Regulations (Civil Services Regulated workmen)

குடிமைப்பணி ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டவர்கள்

(E) Answer not known

விடை தெரியவில்லை

171. Draft the professional Positions Act under the standing orders are to be submitted within

தொழிலக பணி நிலையாணைகள் சட்டத்தின் கீழ் வரைவு நிலையாணைகள் எவ்வளவு நாட்களுக்குள் சமர்ப்பித்திட வேண்டும்?

(A) 6 months from the application of an Act in 5 copies

இந்த சட்டம் அமுலாக்கத்திற்குள் வந்த நாளில் இருந்து 5 நகல்களுடன் 6 மாத காலத்திற்குள்

(B) One year from the application of an Act in 10 copies

இந்த சட்டம் அமுலாக்கத்திற்குள் வந்த நாளில் இருந்து 10 நகல்களுடன் 1 ஆண்டுக்குள்

(C) 3 months from the application of an Act in 5 copies

இந்த சட்டம் அமுலாக்கத்திற்குள் வந்த நாளில் இருந்து 5 நகல்களுடன் 3 மாத காலத்திற்குள்

(D) 2 months from the application of an Act in 5 copies

இந்த சட்டம் அமுலாக்கத்திற்குள் வந்த நாளில் இருந்து 5 நகல்களுடன் 2 மாத காலத்திற்குள்

(E) Answer not known

விடை தெரியவில்லை

172. Which of the following is/true about dissolution of trade unions?
கீழ்க்குறிப்பிட்டுள்ளவற்றில் தொழிற்சங்கத்தினைக் கலைத்தல் பற்றிய சரியானக் கூற்று எது/எவை?

(i) Notice of the dissolution should be signed by 100 members and by the secretary.
ஒரு அறிவிப்பினை தொழிற்சங்கத்தினைக் கலைத்தல் குறித்து 100 உறுப்பினர்கள் மற்றும் அச்சங்கத்தின் செயலாளர் கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும்.

(ii) Within 14 days of the dissolution, the notice should be sent.
தொழிற்சங்கம் கலைக்கப்பட்டு 14 நாட்களுக்குள் அறிவிப்பினைக் கொடுத்தல் வேண்டும்.

(iii) Dissolution has been effected in accordance with rules of the Trade Union.
தொழிற்சங்க விதிகளின் ஒத்து தொழிற்சங்கத்தினை கலைத்தல் வேண்டும்.

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) only
(ii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

173. The right to collective bargaining for Trade Unions in industry is guaranteed under the constitution of
தொழிற்சாலையில் தொழிற்சங்கங்களுக்கான கூட்டுப்பேர உரிமையை அரசியல் சாசனத்தில் உறுதியளித்துள்ள நாடு

(A) India
இந்தியா

(B) Japan
ஜப்பான்

(C) England
இங்கிலாந்து

(D) Germany
ஜெர்மனி

(E) Answer not known
விடை தெரியவில்லை

174. Which of the following is/are true about Recognition of Trade Union?
கீழ்க்குறிப்பிட்டுள்ளவற்றில் தொழிற்சங்க அங்கீகாரம் பற்றி கூறியுள்ளவற்றில் எது/எவை சரியானது ?

(i) Recognition of Trade Unions in India was incorporated in Chapter IV A

இந்தியாவில் அத்தியாயம் IV A வில் தொழிற்சங்க அங்கீகாரம் பற்றிக் கூறுகிறது

(ii) Sections 28 A to 28-I are regarding Recognition

பிரிவுகள் 28 A - 28-I தொழிற்சங்க அங்கீகாரத்தைப் பற்றியது

(iii) The Recognition provisions are inserted by an amendment of Indian Trade Unions Act in the year 1947

அங்கீகாரம் பற்றிய பிரிவுகள் இந்திய தொழிற்சங்க திருத்தச் சட்டத்தின்படி 1947இல் சேர்க்கப்பட்டது.

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

175. Which one of the following is/are correct?
பின்வருவனவற்றுள் எது/எவை சரி?

(i) A person who has not attained the age of Eighteen years can be a member of a Registered Trade Union.

18 வயதை எட்டாத ஒருவர் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்க முடியும்.

(ii) A person who has attained the age of Fifteen years can be a member of a Registered Trade Union.

15 வயதை எட்டிய ஒருவர் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்க முடியும்.

(iii) A person who has not attained age of Fourteen years can not be a member of a Registered Trade Union.

14 வயதை எட்டாத ஒருவர் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்க முடியாது.

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) only
(ii) மட்டும்

(C) (iii) only
(iii) மட்டும்

(D) All are correct
அனைத்தும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

176. A person aggrieved by any refusal of the Registrar to register trade union can prefer a appeal
பதிவாளர் தொழிற்சங்கத்தை பதிவு செய்ய மறுத்ததனால் பாதிக்கப்பட்ட நபர் எங்கு மேல்முறையீடு செய்ய முடியும்

(A) Where the head office of the Trade Union is situated within the limits of a presidency-town to the High court
தொழிற்சங்கத்தின் தலைமை அலுவலகம் ஒரு பெருநகர எல்லைப் பகுதிக்குள் இருக்குமிடத்து உயர் நீதிமன்றத்திலும்

(B) Where the head office is situated in an area, falling within the jurisdiction of a Labour Court
தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் ஒரு தொழிலாளர் நீதிமன்றத்தின் ஆள்வரைக்குள் அமையப் பெற்றால் அங்கும்

(C) (A) is correct and (B) is incorrect
(A) சரி மற்றும் (B) தவறு

(D) Both (A) and (B) are correct
(A) மற்றும் (B) இரண்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

177. Which of the following statements are true about the trade union?
கீழ்கண்டவற்றில் தொழிற்சங்கம் குறித்து எது சரியானது ?

(i) Trade union is limited only to worker union.

தொழிற்சங்கம் என்பது தொழிலாளர்களின் சங்கத்திற்கு மட்டுமே உரியது.

(ii) Trade union may be any temporary combination to regulate the relationship of workman and Employer.

தொழிற்சங்கம் என்பது வேலையால் வேலையளிப்பரை நெறிப்படுத்தும் தற்காலிகமானதாகவும் இருக்கலாம்.

(iii) Trade union is a permanent combination to regulate employer and workman relationship.

தொழிற்சங்கம் என்பது வேலையால் வேலையளிப்பவரை நெறிப்படுத்தும் நிரந்தரமான அமைப்பாகும்.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

178. Arrange the order of Domestic Inquiry Procedure under the Employment (Standing orders) Act, 1946
தொழிலகப் பணி (நிலையாணைகள்) சட்டம், 1946 – ன் கீழ் உள் விசாரணை முறை நடவடிக்கைகளை வகைப்படுத்துக (வரிசைப்படுத்துக)

(i) Serving of charge – Memo
குறிப்பாணை நகல் வழங்குதல்

(ii) Cross – examination of Employee witness
பணியாளரின் சாட்சியின் குறுக்கு விசாரணை

(iii) Cross – examination of Employer's witness
முதலாளியின் சாட்சியின் குறுக்கு விசாரணை

(iv) Appearance of Employee witness
பணியாளர் சாட்சி ஆஜர்படுத்துதல்

(v) Appearance of Employer witness
முதலாளியின் சாட்சி ஆஜர்படுத்துதல்

(A) (i), (ii), (iii), (iv) and (v)
(i), (ii), (iii), (iv) மற்றும் (v)

(B) (i), (iii), (iv), (v) and (ii)
(i), (iii), (iv), (v) மற்றும் (ii)

(C) (i), (iv), (ii), (v) and (iii)
(i), (iv), (ii), (v) மற்றும் (iii)

(D) (i), (v), (iii), (iv) and (ii)
(i), (v), (iii), (iv) மற்றும் (ii)

(E) Answer not known
விடை தெரியவில்லை

179. What is the time Limit for raising the Industrial Dispute before the Labour court under section 2A of the I.D Act 1947 against the termination of an employee?

பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர் தொழிற் தகராறு சட்டம் 1947 ன் பிரிவு 2A-ன் கீழ் தனது பணி நீக்கத்திற்கு எதிராக தொழிலாளர் நீதிமன்றத்தில் தொழிற் தகராறு எழுப்ப கால வரையறை என்ன?

(A) Three years from the date of termination

பணி நீக்க தேதியில் இருந்து மூன்று ஆண்டுகள்

(B) Three years from the date of conciliation failure

சமரச முறிவு தேதியில் இருந்து மூன்று ஆண்டுகள்

(C) Two years from the date of termination

பணி நீக்க தேதியில் இருந்து இரண்டு ஆண்டுகள்

(D) Two years from the date of failure of conciliation

சமரச முறிவு தேதியில் இருந்து இரண்டு ஆண்டுகள்

(E) Answer not known

விடை தெரியவில்லை

180. In an Industrial dispute, during the pendency of any conciliation proceeding before any Board or Tribunal, the employer shall
முதலாளியானவர், வாரியத்திலோ, தீர்ப்பாயத்திலோ நிலுவையிலுள்ள தொழிலக தகராறு சமரச நடவடிக்கைகளில், கீழ்கண்டவற்றை செய்யலாம்

(A) Alter the conditions of service of workmen

தொழிலாளியின் பணிமுறைமையை மாற்றி அமைப்பது

(B) Discharge the misconduct connected with the dispute

தொழிலக தகராறுடன் இணைந்த ஒழுங்கீன நடத்தையை விடுவிப்பது

(C) Alter the conditions of service of workmen not connected with dispute

தொழிலக தகராறுடன் இணையாத தொழிலாளியின் பணிமுறைமையை மாற்றி அமைப்பது

(D) Dismiss the workmen connected with the dispute

தொழிலக தகராறுடன் இணைந்த தொழிலாளியினை பணி நீக்கம் செய்வது

(E) Answer not known
விடை தெரியவில்லை

181. Art.15 deals with prohibition of discrimination. The grounds mentioned under this article is/are

வேறுபாட்டுகளை ஷரத்து 15 தடை செய்கின்றது. அதில் கண்ட முக்கிய வகைகளில் வேறுபடுத்தக் கூடாது என குறிப்பிட்டுள்ளது. அவைகளான

(i) Religion
மதம்

(ii) Race
இனம்

(iii) Caste
ஜாதி

(iv) Sex
பாலினம்

(v) Place of birth
பிறப்பிடம்

(vi) Place of residence
குடியிருப்பிடம்

(vii) Descent
வம்சாவளி

Among these grounds, which are correct?

மேற்கண்ட முக்கிய வகைகளில், எவைகள் சரியானவை?

(A) (i), (ii), (iii), (iv) and (vii)
(i), (ii), (iii), (iv) மற்றும் (vii)

(B) (ii), (iii), (iv), (vi) and (vii)
(ii), (iii), (iv), (vi) மற்றும் (vii)

(C) (i), (ii), (iii), (iv) and (v)
(i), (ii), (iii), (iv) மற்றும் (v)

(D) (i), (ii), (iii), (iv) and (vi)
(i), (ii), (iii), (iv) மற்றும் (vi)

(E) Answer not known
விடை தெரியவில்லை

182. Arrange the following cases year wise in chronological order :
கால வரிசைக் கிரமமாக வழக்குகளை வரிசைப்படுத்துக :

(1) Shankari Prasad V. union of India
சங்கரி பிரசாத் எதிர் இந்திய யூனியன்

(2) Kesavananda Bharati V. State of Kerala
கேசவானந்த பாரதி எதிர் கேரள மாநிலம்

(3) Golak Nath V. State of Punjab
கோலக் நாத் எதிர் பஞ்சாப் மாநிலம்

(4) Sajjan Singh V. State of Rajasthan
சஜ்ஜன் சிங் எதிர் ராஜஸ்தான் மாநிலம்

(A) (1), (4), (3), (2)
(B) (1), (2), (3), (4)
(C) (1), (3), (2), (4)
(D) (1), (4), (2), (3)
(E) Answer not known
விடை தெரியவில்லை

183. In which of the case, the supreme court held that the court cannot pass an order or issue a direction which would be violative of fundamental rights of citizens, it can be said that the expression 'State' as defined in article 12 of the constitution includes judiciary also.
கீழ்க்கண்ட எந்த வழக்கில், உச்சநீதிமன்றம் நீதிமன்றம் குடிமக்களின் அடிப்படை உரிமைக்கு எதிராக உத்தரவோ அல்லது நெறிமுறையோ வழங்க முடியாது. ஏனென்றால் நீதிமன்றம் அரசமைப்பு சட்டத்தின் ஷரத்து 12-ன் கீழ் 'அரசு' என்ற வரையறைக்குள் உள்ளடங்கியதாகும்.

(A) M. C. Metha V. Union of India (1987)/SCC 395
எம்.சி. மேத்தா எதிர் இந்திய யூனியன் (1987)/SCC 395

(B) S. M. IIyas V. ICAR, (1993)/SCC 182
எஸ்.எம். அய்யாஸ் எதிர் ஐ.சி.ஏ.ஆர். (1993)/SCC 182

(C) Ajay Hasia V. Khalid Mujib, AIR 1981 SC 487
அஜய் ஹாசியா எதிர் காலிட் முஜீப் AIR 1981 SC 487

(D) A. R. Antulay V. R. S. Nayak, AIR 1988 SC 1531
ஏ.ஆர். ஏந்துலே எதிர் ஆர். எஸ். நாயக் AIR 1988 SC 1531

(E) Answer not known
விடை தெரியவில்லை

184. Administrative Tribunals for service matters dealt under ———— of constitution of India.
இந்திய அரசமைப்பில் அரசு பணி குறித்த நிர்வாகத் தீர்ப்பாயம் எந்த ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

(A) Article 323–A
ஷரத்து 323–A

(B) Article 323–B
ஷரத்து 323–B

(C) Article 323–C
ஷரத்து 323–C

(D) Article 323–D
ஷரத்து 323–D

(E) Answer not known
விடை தெரியவில்லை

185. Following one of the case law is the main causes for 1st amendment of the Indian constitution
கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தத்திற்கு காரணமான வழக்கு

(A) M.C. Metha (Vs) State of Tamilnadu
M.C. மேத்தா (எதிர்) தமிழ்நாடு அரசு

(B) Champakam Dorairajan (Vs) State of Madras
சம்பகம் துறைராஜன் (எதிர்) மெட்ராஸ் மாகாண அரசு

(C) R. Rajagopal (Vs) State of Tamilnadu
R. ராஜகோபால் (எதிர்) தமிழ்நாடு அரசு

(D) I.R. Coelho (Vs) State of Tamilnadu
I.R. கோயல்ஹோ (எதிர்) தமிழ்நாடு அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

186. With reference to Art–16, consider the following statements
ஷரத்து 16 ஐப் பற்றிய கீழ்கண்ட கூற்றுகளின் படி

(i) Reservation can be made by the legislature only
சட்டமன்றத்தால் மட்டுமே இட ஒதுக்கீட்டை செய்ய முடியும்

(ii) Reservation can be made by the legislature or by the executive
சட்டமன்றத்தாலோ அல்லது நிர்வாகத்துறையின் உத்தரவாலோ இடஒதுக்கீட்டை செய்யமுடியும்

(iii) Art.16(4) is exception to Art.16(1)
ஷரத்து 16(1) க்கு ஷரத்து 16(4) விதிவிலக்காகும்

(iv) Backwardness contemplated in Art.16(4) is SEBC only
ஷரத்து 16 (4) ல் குறிப்பிட்டுள்ள பின்தங்கிய வகுப்பானது சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய வகுப்பாகும் (SEBC)

(v) Backwardness can be found out on the basis of 'Caste'
ஜாதிய அடிப்படையிலேயே பின்தங்கிய நிலையை கண்டறிய வேண்டும்

In the above statements, which is/are not correct?
மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானவை அன்று ஆகும்?

(A) (i), (iii) and (iv)
(i), (iii) மற்றும் (iv)

(B) (ii) and (v)
(ii) மற்றும் (v)

(C) (ii), (iii) and (iv)
(ii), (iii) மற்றும் (iv)

(D) (i), (iii) and (v)
(i), (iii) மற்றும் (v)

(E) Answer not known
விடை தெரியவில்லை

187. In which case, the Supreme Court has profounded the "Theory of instrumentality or agency of state"?

"அரசின் ஒரு கருவி அல்லது அரசின் முகமை" என்னும் கொள்கையை உச்ச நீதிமன்றம் எந்தவொரு வழக்கில் பிறந்துள்ளது ?

(A) R. D. Shetty V. The International Airport Authority of India AIR 1979 SC 1628.

ஆர்.டி.ஷெட்டி-எதிர்-சர்வதேச விமான இந்திய ஆணையம் AIR 1979 SC 1628.

(B) Som Prakash V. Union of India AIR 1981 SC 212

சோம் பிரகாஷ்-எதிர்-இந்திய யூனியம் AIR 1981 SC 212

(C) Sukhdev Singh V. Bhagatram AIR 1975 SC 1331

சுக் தேவ் சிங்-எதிர்-பக்த்ராம் AIR 1975 SC 1331

(D) Electricity Board, Rajasthan V. Mohan Lal AIR 1967 SC 1857

இராஜஸ்தான் மின்வாரியம்-எதிர்-மோகன்லால் AIR 1967 SC 1857

(E) Answer not known
விடை தெரியவில்லை

188. The principles governing issue of writ of Habeas Corpus are
ஆட்கொணர் நீதிப்பேராண்மையைப் பிறப்பித்தல் குறித்த கொள்கைகளான

(a) An application for grant of writ can be made by the detenu alone
காவலிலுள்ள கைதியால் மட்டுமே இந்நீதிப்பேராண்மையைப் பிறப்பிக்க மனு தாக்கல் செய்ய வேண்டும்

(b) An application for grant of writ can be made by the detenu himself or by any person on his behalf, who is not a stranger
காவலிலுள்ள கைதி அல்லது அவருக்கு மூன்றாம் நபர் அல்லாத எந்தவொரு நபரும் அந்நபருக்காக இந்நீதிப்பேராண்மையைப் பிறப்பிக்க மனுதாக்கல் செய்யலாம்

(c) The application must be supported by an affidavit showing the facts and circumstances of the detention which is alleged to be illegal
இந்நீதிப்பேராண்மையை சத்தியப்பிரமாணத்தின் மூலம் வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகள் எடுத்துக்கூறி அக்கைதானவரை சட்டத்திற்கு முரணானது எனச் கூறி மனுதாக்கல் செய்யவேண்டும்

(d) This writ lies in cases where a person is undergoing imprisonment in execution of judicial order on a criminal charge
குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற உத்தரவினால் சிறையில் அடைக்கப்பட்ட நபரும் இந்நீதிப்பேராண்மையை கோரி தாக்கல் செய்யலாம்

In the above statements find incorrect with respect to writ of habeas corpus.

மேற்கண்ட கூற்றுகளில் ஆட்கொணர் நீதிப்பேராண்மை குறித்த தவறானதை கண்டுபிடிக்கவும்

(A) (a) and (c)
(a) மற்றும் (c)

(B) (b) and (c)
(b) மற்றும் (c)

(C) (b) and (d)
(b) மற்றும்(d)

(D) (a) and (b)
(a) மற்றும் (b)

(E) Answer not known
விடை தெரியவில்லை

189. The Supreme Court has awarded compensation of Rs. 35,000 is Rudul Sah v. state of Bihar for

ருடுல்ஸா–எதிர்–பீஹார் மாநிலம் வழக்கில் ரூ. 35,000 இழப்பீடு ———— க்காக வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் கூறியது

(A) Illegal detention in jail for 2 years

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் சட்டத்திற்கு முரணாக அடைத்ததால்

(B) Illegal detention in jail for 14 years

பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் சட்டத்திற்கு முரணாக அடைத்ததால்

(C) Illegal custody in police

காவல் இருப்பில் சட்டத்திற்கு முரணான வகையில் அடைத்ததால்

(D) Arrested under preventive detention law

தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டதால்

(E) Answer not known

விடை தெரியவில்லை

190. ———— takes away the right to property under Article 31 as a fundamental right and make it only a constitutional right

அரசமைப்பின் ———— ஷரத்து 31–ன் கீழ் இருந்த சொத்துரிமையை நீக்கி இனிமேல் சொத்திற்கான உரிமை அடிப்படை உரிமையன்று, வெறும் சட்ட உரிமை மட்டுமே என்று கூறுகிறது.

(A) 42nd Constitutional Amendment

42–வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(B) 43rd Constitutional Amendment

43–வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(C) 44th Constitutional Amendment

44–வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(D) 45th Constitutional Amendment

45–வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(E) Answer not known

விடை தெரியவில்லை

191. The object of the Right to Information Act, 2005 is to secure access to information and to promote transparency and accountability in the working of public authority. However, in certain situations disclosure of information is exempted. In such situation prescribed under which section of the RTI Act, 2005?

பொது அதிகார அமைப்பின் வேலைப்பாடுகளில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்பின்மையும் மேம்படுத்துவதற்காகவும் சுலபமாக தகவை பெறுவதற்காகவும்/அறிந்து கொள்வதுமே 2005–ம் வருடத்திய தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கம் ஆகும். இருப்பினும் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தகவல்கள் அளிப்பது விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சூழல் எந்தப் பிரிவில் 2005–ம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Sec.5
பிரிவு 5

(B) Sec.6
பிரிவு 6

(C) Sec.7
பிரிவு 7

(D) Sec.8
பிரிவு 8

(E) Answer not known
விடை தெரியவில்லை

192. With reference to section 6 of Right to Information Act, 2005, consider the following statements

2005 – ம் வருடத்திய தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 6 ஐ குறித்த கீழ்கண்ட கூற்றுகளை கருத்தில் கொள்க

(i) Application for information be made in English or Hindi

ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ தகவல் கோறும் மனுவை சமர்பிக்க வேண்டும்

(ii) If the applicant makes request of information, the central and state public information officer have assist him to reduce in writting

மனுதாரர் வாய்மொழிவாயிலாக தகவல் கோரினால், மத்திய மற்றும் மாநில தகவல் அலுவலர்கள், அவர் கோறும் வாய்மொழிக் கோரிக்கையை எழுத்துவாக்கம் செய்து கொள்ள வேண்டும்

(iii) The act urges the public information officer to make available the information

பொது தகவல் அலுவலர்கள் அனைத்து தகவல்களையும் தன்னகத்தே வைத்துக் கொள்ள கோறுகிறது

In the above statement's, which is/are not correct?

மேற்கண்ட கூற்றுகளில், எவை தவறானவைகள் ஆகும்?

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) and (iii)
(ii) மற்றும் (iii)

(C) (iii) only
(iii) மட்டும்

(D) (ii) only
(ii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

193. Which of the following is/are called International Bill of Human Rights.
கீழ்குறிப்பிடப்பற்றவற்றுள் எவை "சர்வதேச மனித உரிமை மசோதா" என அழைக்கப்படுகிறது

(i) French Revolution
பிரெஞ்சு புரட்சி

(ii) American war of independence
அமெரிக்க சுதந்திர போர்

(iii) Universal declaration of Human Rights, 1948
அகில உலக மனித உரிமைகள் சாசனம், 1948

(iv) International Covenant on Civil and political Rights, 1966
சர்வதேச குடிமையில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை, 1966

(v) International Covenant on Economic, Social and Cultural Rights, 1966
சர்வதேச சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் உடன்படிக்கை, 1966

Find the correct answer codes given below
கீழே குறிப்பிட்டுள்ள விடைக் குறியீட்டில் சரியானவை ஒன்றை கண்டுபிடிக்கவும்

(A) (i), (ii) and (iii)
(i), (ii) மற்றும் (iii)

(B) (ii), (iii) and (v)
(ii), (iii) மற்றும் (v)

(C) (iii), (iv) and (v)
(iii), (iv) மற்றும் (v)

(D) (ii), (iii) and (iv)
(ii), (iii) மற்றும் (iv)

(E) Answer not known
விடை தெரியவில்லை

194. Which of the following statements are true about State Human Rights Commission?
மாநில மனித உரிமை ஆணையத்தைப் பொருத்த மட்டில் கீழ்கண்டவைகளில் சரியானது எது ?

(i) The term of office of a member is 5 years
ஒரு உறுப்பினரின் பதவிக்காலமானது 5 ஆண்டுகள் ஆகும்

(ii) The member is re–eligible after retirement
ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் தகுதியுடையவர்

(iii) A member can hold office upto 70 years of age.
ஒரு உறுப்பினர் அதிகபட்சம் 70 வயதுவரை பதவி வகிக்கலாம்

(A) (i) only
(i) மட்டும் சரி

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) சரி

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) சரி

(D) (i) and (ii) only
(i) மற்றும் (ii) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

195. Which are the 'Information' under, RTI?
தகவலறியும் உரிமைச் சட்டப்படி கீழ்கண்டவைகள் எவை "தகவல்கள்" என்ற பொருள் உள்ளடங்கும் ?

(A) Records, Documents, Memos
பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்பாணைகள்

(B) Designs, Models, Orders
டிசைன்ஸ், மாதிரிகள், ஆணைகள்

(C) E–mails, Contracts, Books
மின்னஞ்சல்கள், ஒப்பந்தங்கள், நூல்கள்

(D) Reports, Opinion, Plan
அறிக்கைகள், கருத்துரைகள், திட்டங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

196. With reference to the functions of NHRC, consider the following :
தேசிய மனித உரிமை ஆணையத்தின் பணிகளைக் குறித்து கூற்றுகளை பார்க்க :

(i) To enquire any human rights violation
எந்தவொரு மனித உரிமை மீறல்களை விசாரணை செய்தல்

(ii) To enquire any violation of Human rights on the petition presented by the NGO's only
அரசு சாரா அமைப்பு அளிக்கும் புகாரின் பேரில் மட்டுமே மனித உரிமைகளை விசாரணை செய்யும்

(iii) To undertake and promote research is the field of Human rights
மனித உரிமையைக் குறித்து ஆராய்ச்சி செய்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற பணியை எடுத்துச் செய்தல்

(iv) Commission cannot intervene in any court proceeding involving violation of Human Rights
மனித உரிமைக் குறித்து நீதிமன்ற நடைமுறை விசாரணையில் ஆணையம் தலையீடு செய்ய முடியாது

In the above statements, which is/are correct?
மேற்குறிப்பிட்டுள்ள கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(A) (i) and (ii)
(i) மற்றும் (ii)

(B) (ii) and (iii)
(ii) மற்றும் (iii)

(C) (i) and (iii)
(i) மற்றும் (iii)

(D) (ii) and (iv)
(ii) மற்றும் (iv)

(E) Answer not known
விடை தெரியவில்லை

197. Term of chairperson of state Human Rights Commission under section 24 of protection of Human Rights Act, 1993 shall be
மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993 கீழ் மாநில ஆணையத் தலைவரின் பதவிக்காலம் பிரிவு 24–ன் கீழ் ———— ஆகும்

(A) 5 years from date on which he enters office
பதவி ஏற்ற நாள் முதல் 5 ஆண்டுகள்

(B) At the age of 70
எழுபது வயது நிரம்பும் வரையில்

(C) 5 years or age of 70 whichever is earlier
5 ஆண்டுகள் அல்லது எழுபது வயது நிரம்பும் வரையில் எது முந்துவதோ

(D) At the age of 65
அறுபத்தைந்து வயது நிரம்பும் வரையில்

(E) Answer not known
விடை தெரியவில்லை

198. When the Right to information Act, 2005 receives the assent of the president in India?
இந்தியாவில் தகவல் உரிமைச்சட்டம் 2005, எந்நாளில் குடியரசு தலைவரின் ஒப்புதலை பெற்றது?

(A) 15th June 2005
15 ஜீன் 2005

(B) 18th June 2005
18 ஜீன் 2005

(C) 20th June 2005
20 ஜீன் 2005

(D) 21st June 2005
21 ஜீன் 2005

(E) Answer not known
விடை தெரியவில்லை

199. Who is not a part of the committee which recommend the appointment of members of the National Human Rights Commission?
தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களை நியமனம் செய்ய பரிந்துரைக்கும் குழுவில் பின்வரும் எவர் ஒரு அங்கமாக இருக்கமாட்டார்?

(A) Prime Minister
பிரதம மந்திரி

(B) Speaker of the House of People
மக்களவை சபாநாயகர்

(C) Leader of the Opposition in the House of People
மக்களவை எதிர்கட்சி தலைவர்

(D) Chairman of the Council of State
மாநிலங்களவை தலைவர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

200. Arrange the following with respect to development of Human Rights in Chronological Order
மனித உரிமைகள் வளர்ச்சி குறித்தான பின்வரும் நிகழ்வுகளை கால முறைப்படி வரிசைபடுத்துக.

(1) Declaration of the Right of man and of the citizen
மனித மற்றும் குடிமக்கள் உரிமைக்கான பிரகடனம்

(2) American declaration of Independence
அமெரிக்க சுதந்திர பிரகடனம்

(3) English Bill of Rights
ஆங்கிலேய மனித உரிமை வரைவு

(4) The Atlantic Charter
அட்லாண்டிக் சாசனம்

(A) (3), (1), (2), (4)

(B) (3), (2), (1), (4)

(C) (2), (1), (3), (4)

(D) (2), (3), (1), (4)

(E) Answer not known
விடை தெரியவில்லை